**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Kaviyarasan |
| P.W. | : 1 |
| Father Name | : Murugesan |
| Village | : Kaniyur |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.2021

நான் கணியூரில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை தெரியாது. இறந்து போன சத்தியாவாணி என்பவர் எனது தாயார் ஆவார் . கடந்த 24.01.2019 அன்று காலை 08.30 மணிக்கு HERO PASSION PRO வண்டியில் நான் ஓட்டி எனது அம்மா பின்னால் உட்கார்ந்து வந்தார் . அப்போது கழுகரைக்கு செல்லும் போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி போகும் அந்த ரோட்டில் நான் இடது ஓரத்தில் வி .கே. ஹாலோ பிளாக் கடை அருகில் செல்லும் போது எங்களுக்கு பின்னால் வந்த TATA ACE என்ற வாகனம் எங்களை முந்தி செல்லும் போது எனது வாகனத்தின் பக்கவாட்டில் மோதியதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம் . எனது அம்மாவுக்கு காதில் ரத்தம் வந்தது . பின்னாடி எனது சித்தப்பா பொன்னுசாமி வந்தார் . பின் ஆம்புலன்சில் உடுமலை அரசு

மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து கோவை அரசு மருத்துவமனைக்கு கூட்டி போகச் சொன்னார்கள் . நாங்கள் அழைத்து சென்றோம் . கோவையில் எனது அம்மாவை தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தார். அங்கு எனது அம்மா மயக்கத்தில் இருந்தார். அடுத்த நாள் 25.01.2019 அன்று மடத்துக்குளம் காவல்நிலையம் வந்து நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . அது அ.சா.ஆ. 1 ஆகும். அந்த புகாரை எனது பக்கத்தில் இருந்தவர் எழுதி கொடுத்தார் . அவர் பெயர் தெரியாது . எனது அம்மா கடந்த 28.01.2019 அன்று அதிகாலை 03.30 மணிக்கு இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். பின்னால் வந்த வாகனம் ஓவர்டேக் செய்த விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது . என்னிடம் காட்டிய புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கொடுத்த புகாரில் நான் வந்து கொண்டிருந்த போது வி.கே.எம். ஹாலோ பிளாக் அருகே பின்னால் வந்த வாகனம் சைடில் ஏறி அடித்துவிட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் என்னிடம் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கோவையில் 25.01.2019 அன்று விசாரித்தார்கள். சுமாராக எத்தனை மணி இருக்கும் என்றால் தெரியாது . என்னை போலீசார் விசாரிக்கும் போது பின்னால் வந்த வாகனம் ஏறி வந்து அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சைடில் வந்து அடித்ததாக சொல்லியுள்ளேன் . எனது புகாரிலோ, வாக்குமூலத்திலோ வாகனம் பின்னாடி வந்து அடித்துவிட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். கோவை சென்ற பின்பு எனது அம்மாவுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான் . அவர் இறந்த பிறகு பிரேத பரிசோதனை எங்கு செய்தார்கள் என்றால் கோவையில் தான் செய்தார்கள். எனது அம்மாவின் உடலை எங்கு கொண்டு வந்தோம் என்றால் எனது ஊருக்கு கொண்டு வந்தோம் . எனது அம்மாவுக்கு அடிப்பட்டதிலிருந்து அவர் இறக்கும் வரை நான் மட்டும் தான் இருந்தேனா என்றால்

இல்லை . உறவினர்கள் எல்லாரும் இருந்தார்கள் . நான் போலீஸ் விசாரணையில் கோவையில் இருந்து என் அம்மாவுடன் இருக்கும்போது அவர் பேச முடியாததால் நான் புகார் கொடுக்கிறேன் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் . எனது அம்மா அடிப்பட்ட போது வேறு ஏதாவது TATA ACE வாகனம் வந்ததா என்றால் இல்லை. விழுந்த உடன் ஆம்புலன்ஸ் வந்தது அதில் எனது அம்மாவை ஏற்றி சொன்றோமா என்றால் ஆமாம். அங்கு வேறு யாரும் வந்தார்களா என்று எனக்கு தெரியாதா ? என்றால் எனது சித்தப்பா பொன்னுசாமி மற்றும் அவரது மனைவி லட்சுமி மட்டும் வந்தார்களா என்றால் ஆமாம். என் மீது அடித்த வண்டி தெரியாது என்றால் சரிதான் . விபத்து காப்பீடு பெறுவதற்காக ஏதோ வண்டியை குறிப்பிட்டால் தான் காப்பீடு கிடைக்கும் என்பதற்காக 1 நாள் கழித்து புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரோட்டில் இடது ஓரமாக மண் தடத்தில் சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். விபத்து இடது ஓரமாக மண் தடத்தில் நடந்ததா என்றால் சரிதான் . அதைத்தவிர வேறு ஏதாவது நடந்ததாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். நடுரோட்டில் நடந்தது. விபத்து நடந்தது எந்த இடம் என்றால் ரோட்டின் சைடில் நடந்தது . நடுரோட்ல் விபத்து நடந்ததா என்றால் இல்லை. இந்த விபத்திற்கு காரணம் என்னுடைய அஜாக்கிரதை என்றால் சரியல்ல.